DEPOSITION OF WITNESS
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.I, BHAVANI
PROSECUTION WITNESS

CC. No. 199/2022 Crime No. 288/2022 Station Bhavani

| Name | PW-2/Lw2- சுரேஷ் | Village | |
|---|---|---|---|
| Father Name | கருப்பண்ணன் | Taluk | |
| Age | 29 | Calling | |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of Oath Act the day of | | | 16.05.2024 |

**முதல் விசாரணை-**

எதிரி சத்தியகுமார் ஆஜர்

நான் கூலிக்காரன்பாளையத்தில் குடியிருந்து கொண்டு ஓட்டல் கடை வைத்துள்ளேன். தேதி மற்றும் மாதம் நினைவில்லை, சுமார் 2 ஆண்டுகளுக்கு முன்பு ஒருநாள் மதியம் 2.00 மணிக்கு மேல் மூன்ரோடு செல்வதற்காக கூலிக்காரன்பாளையம் சுடுகாடு அருகில் எனது பைக்கில் வந்து கொண்டிருந்தபோது சத்தம் கேட்டது. நான் அங்கு சென்று பார்த்தபோது பைக்கும், காரும் மோதி விபத்து ஏற்பட்டிருந்தது. சம்பவயிடத்திலேயே பைக்கை ஓட்டி வந்த நபர் இறந்துவிட்டார். பைக்கின் பின்னால் அமர்ந்து வந்த நபருக்கு பலத்த காயம் ஏற்பட்டிருந்தது. காயம்பட்டவர்களை 108 ஆம்புலன்ஸ் மூலம் மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தோம். விபத்தை ஏற்படுத்திய காரை ஓட்டி வந்த நபரை என்னால் அடையாளம் காண இயலாது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**அரசு தரப்பில் இந்த சாட்சியை பிறழ் சாட்சியாக கருதக் கோரி கூறியதன் பேரில் இந்த சாட்சியை பிறழ் சாட்சியாக கருதப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை.**

கூலிக்காரன்பாளையம் சுடுகாடு அருகில் சம்பவத்தன்று நான் சென்று கொண்டிருந்ததாகவும், அப்போது தெற்கிலிருந்து வடக்கு நோக்கி ஒரு பைக் வந்து கொண்டிருந்ததாகவும், அதற்கு எதிர் திசையில் வேகமாக வந்த கார் பைக்கின் மீது மோதி விபத்தை ஏற்படுத்திவிட்டதாகவும், அந்த விபத்தை நான் நேரில் பார்த்ததாகவும், அங்கு அந்த காரின் ஓட்டுநரை பற்றி விசாரித்தபோது அவர் சத்தியகுமார் என்று தெரிந்து கொண்டதாகவும், தற்பொழுது விபத்தை நேரில் பார்க்கவில்லை என்றும் மேற்படி காரின் ஓட்டுநரை அடையாளம் காட்ட இயலாது என்றும் சொன்னால், சரியல்ல. போலீஸ் விசாரணையில் மேற்படி சம்பவங்களை கூறிவிட்டு தற்பொழுது எதிரிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல.